பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 05 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு இந்தியாவுக்கு முழு உரிமை உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. பள்ளிக்கல்வி முறையை மாற்றியமைப்பது தொடர்பான கொள்கை அறிக்கையை நித்தி ஆயோக் இன்று வெளியிட்டுள்ளது.

3. பீகாரில் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி தலைமையிலான அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4. ஈரானிடம் உள்ள அணு ஆயுதம் தயாரிப்பதற்கான செறிவூட்டப்பட்ட பொருட்களை அகற்ற அமெரிக்காவுடன் இணைந்து செயல்படுவதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

5. தும்கூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி — போலந்தின் **Zuzanna** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

தீவிரவாதத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு இந்தியாவுக்கு முழு உரிமை உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளுக்கு இந்தியா வலுசேர்க்கும் என்று தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் மூலம், பாகிஸ்தானின் எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோதமாக தங்கியுள்ள பங்களாதேஷ் நாட்டவர் குறித்து குறிப்பிட்ட அவர், இந்தியாவில் தங்கியுள்ளவர்களின் குடியுரிமையை சரிபார்க்க பங்களாதேஷூக்கு அனுப்பப்பட்ட 2 ஆயிரத்து 860-க்கும் மேற்பட்ட கோப்புகள் நிலுவையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்களை உடனடியாக அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்ப வேண்டியது கட்டாயம் என்றும் அவர் கூறினார்.

காலிஸ்தான் தீவிரவாத குழுக்களுக்கு கனடா அடைக்கலம் கொடுத்து வருவது குறித்த கவலையை இந்தியா தொடர்ந்து அந்நாட்டிடம் வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கு எதிரான அந்த அமைப்பினர் மீது உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கனடா அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அமைப்பினர் இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும், வழிபாட்டுத் தலங்களில் வன்முறையில் ஈடுபடுவதாகவும், பிரிவினைவாதத்தை தூண்டுவதாகவும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, பாகிஸ்தானின் **13** போர் விமானங்கள் தாக்கி அழிக்கப்பட்டதாக இந்திய விமானப்படையின் துணை தளபதி ஏர் மார்ஷல் **Awadesh Kumar Bharti** தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்நாட்டில் உள்ள ஒன்பது தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறினார்.

மேலும், பாகிஸ்தானின் 11 விமான ஓடுதளங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பள்ளிக்கல்வி முறையை மாற்றியமைப்பது தொடர்பான கொள்கை அறிக்கையை நித்தி ஆயோக் இன்று வெளியிட்டுள்ளது.

நாட்டின் பள்ளிக்கல்வி கட்டமைப்புகள் தொடர்பான 13 பரிந்துரைகள் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

அடிப்படைக் கல்வியை மேம்படுத்தி, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தை கொண்டுவந்து மாணவர்களின் நலனுக்கான கொள்கைகள் இதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வேளாண் மற்றும் மீன் உணவுப் பொருட்களை உலகச் சந்தையில் விற்பதற்கான சுகாதார அனுமதியை பெறுவதற்கு இந்தியா முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதன் ஒருபகுதியாக, மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இதற்கான நடைமுறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்குபின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் வேளாண் மற்றும் மீன் பொருட்களுக்கு உலகச் சந்தையில் சுகாதார அனுமதி கிடைக்கும்பட்சத்தில் இவற்றின் ஏற்றுமதி அதிகரிக்கும் என்றும், விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரின் வருவாய் உயரும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு இந்தஅனுமதி உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலகத் தரத்திலான உற்பத்தியை உறுதி செய்வதற்கான கட்டமைப்பை ஏற்படுத்துவது, அனுமதி பெறுவதற்கான அமைப்பு மற்றும் பொருட்களின் தரத்தை உயர்த்துவது உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஏழரை கோடி பார்சல்களை அஞ்சல் துறை கையாண்டு வருவதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் புனரமைக்கப்பட்ட அஞ்சலகத்தை திறந்துவைத்து பேசிய அவர், ஆண்டுதோறும் 90 கோடி கடிதங்களும் அஞ்சல் துறை மூலம் கையாளப்பட்டு வருவதாக கூறினார்.

பாஸ்போர்ட் சேவை மையங்கள் தொடங்கியபின் அஞ்சலகங்கள் மூலம் இரண்டு கோடியே 12 லட்சம் பாஸ்போர்ட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த நான்காண்டுகளில் இந்திய அஞ்சலக வங்கியில் 13 கோடி புதிய வாடிக்கையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதாக திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<<<>>>>>>

சர்வதேச கடல் பகுதியில் மீட்புப் பணிகளில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய பெருங்கடல் மண்டல நாடுகள் கலந்தாய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

இந்தியாவையொட்டியுள்ள கடல் பகுதிகளில் அவ்வப்போது பாதிப்புக்கு உள்ளாகும் மாலுமிகளை காப்பாற்ற உடனடி நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருவதாகவும் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வளமான இந்திய பெருங்கடல் பகுதியை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

வளரும் நாடுகளின் கடல்சார் மேம்பாட்டுக்காக இந்திய பெருங்கடல் நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதாகவும் திரு சர்பானந்த சோனாவால் கூறினார்.

<<<<<<>>>>>>

பீகாரில் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி தலைமையிலான அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாட்னாவில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், ஆளுநர் லெப்டினென்ட் ஜென்ரல் **Syed Ata Hasnain, 32** புதிய அமைச்சர்களுக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பீகார் அமைச்சரவையில் பிஜேபியைச் சேர்ந்த **15** பேரும், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த **13** பேரும், லோக் ஜன்சக்தி கட்சியைச் சேர்ந்த **2** பேரும் இடம்பெற்றுள்ளனர்.

இவ்விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, திரு. ஜெ.பி. நட்டா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

<<<<<<>>>>>>

தமிழகம், மேற்குவங்கம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அமைச்சரவைச் செயலர், மாநில தலைமைச் செயலர்கள் மற்றும் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை நெறிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் **Falta** சட்டப்பேரவைத் தொகுதிக்கு மறு வாக்குப்பதிவு நடத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதால், அந்த

தொகுதியில் மட்டும் நடத்தை நெறிமுறைகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிக்கான மறு வாக்குப்பதிவு இம்மாதம் 21-ஆம் தேதி நடத்தப்பட்டு, 24-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

நான்கு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்துக்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்கள் மற்றும் சில மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களின்போது ஆயிரத்து 400 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த 2021-ல் நடைபெற்ற தேர்தலைகாட்டிலும், இந்த தொகை 40 சதவீதம் கூடுதல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட தொகை, 69 சதவீதமும், தமிழகத்தில் 48 சதவீதமும் அதிகரித்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

ஈரானிடமிருந்து அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் செறிவூட்டப்பட்ட பொருட்களை அகற்ற அமெரிக்காவுடன் இணைந்து செயல்படுவதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

மேற்காசிய பிரச்சினை தொடர்பாக, அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்புடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஈரானுடன், அமெரிக்கா நடத்தும் முயற்சிகளால் இஸ்ரேல் அதிர்ச்சி அடைந்ததாக வந்த தகவல்களை திரு பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஊழியர்களுக்கான டிஜிட்டல் கட்டமைப்பை மேம்படுத்த இந்தியாவும், மொரிஷியஸும் இணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மொரிஷியஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் **Dhananjay Ramful**-வுடன் ஆலோசனை மேற்கொண்டபின், சமூக

வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதுதொடர்பாக, ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

ஊழியர்களின் மேம்பாட்டுக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்தும், இதற்கான இணையதள சேவை குறித்தும் அவர் கேட்டறிந்ததாக கூறியுள்ளார்.

மொரிஷியஸ் உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் தொழிலாளர் நலனுக்காக இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்பதாக டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தும்கூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி — போலந்தின் **Zuzanna** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **7-5, 6-1** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Soha Sadiq — Madhurima Sawant** இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி, **Zheel Desai** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prarthana Thombare** — அமெரிக்காவின் **Jaeda Daniel** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்க முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **1-6, 6-3, 10-8** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் எலிசபெத் — செக் குடியரசின் **Lucie Petruzelova** இணையை வென்றது.

------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **3-6, 6-4, 7-6** என்ற செட் கணக்கில் மனீஷ் சுரேஷ்குமாரை வென்றார்.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**<<<<<<END>>>>>>**